தொழில்நுட்பக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நான் அப்படி தவறாகச் சொல்லியிருந்தால், அதனைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே தமிழகத்தில் 30 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் மட்டும்தான் செயல்பட்டுக் கொண்டிருந்தன. அதிகமான மாணவர்கள் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியில் பயில வேண்டுமென்ற நோக்கத்தில், மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த நான்கு ஆண்டுகளில் மேலும் கூடுதலாக 11 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளைத் தந்து, பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண்ணிக்கையை 41 ஆக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்புகூட மாண்புமிகு அம்மா அவர்கள் இன்னும் கூடுதலான மாணவர்கள் தொழிற்கல்வியைப் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு, தமிழகத்தில் மேலும் 5 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தற்பொழுது, அரசின் சார்பாக 46 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காடாம்புலியூரில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிவிப்பிற்கிணங்க, அது செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 362, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

362—

பேருந்து வசதி

***56613—திரு. மு. திராவிடமணி:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2015 செப்டம்பர் 28]

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர்–நெல்லியாளம் இடையே நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கூடலூர், நெல்லியாளம் ஆகிய பகுதிகளில் தற்போது பயணிகளின் அடர்விற்கேற்ப தினசரி 27 பேருந்துகள்மூலம் 105 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, இயக்கப்படும் பேருந்துகளே பொது மக்களின் தேவைக்குப் போதுமானதாக உள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான கூடலூரில் இயங்கிக் கொண்டிருக்கின்ற அரசு போக்குவரத்துக் கிளைக் கழகம் கடந்த 1972 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதற்கென்று, சொந்தமாக ஒரு ஏக்கர் 51 சென்ட் நிலம் உள்ளது. தற்போது 45 பேருந்துகள் இயங்கி வருகின்றன. கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னர் இயக்கப்பட்டுவந்த அதே எண்ணிக்கையிலான பேருந்துகள்தான் தற்போதும் இயக்கப்பட்டு வருகின்றன. பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப, அந்த பேருந்துகள் போதுமானதாக இல்லை. மேலும், சமவெளியில் ஓடுகின்ற பேருந்துகளைத்தான் மாற்றி அந்தப் பகுதியில் இயக்குகின்றார்கள். என் தொகுதியில் கிட்டத்தட்ட இரண்டரை இலட்சம் மக்கள் இருக்கின்றார்கள்; 504.52 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது; கூடலூர் மற்றும் நெல்லியாளம் என இரண்டு ஊராட்சிகள் உள்ளன. இரண்டு ஊராட்சிகளிலும் கல்லூரி, மருத்துவமனை மற்றும் அரசு அலுவலகங்களுக்குச் சென்று கொண்டிருக்கின்ற மாணவர்கள், மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுடைய எண்ணிக்கை அதிகமாக இருப்பதனால், காலை, மாலை இரண்டு வேளைகளிலும், அதாவது* peak hours*–ல் பெரும் நெருக்கடி*

ஏற்படுகின்றது. இதனால், பெரிய பிரச்சினைகளையெல்லாம் சந்திக்க நேரிடுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கேரளா, கர்நாடகம் எல்லை மாநிலங்களாக இருக்கின்ற காரணத்தால், அந்த மாநிலங்களைச் சேர்ந்த பேருந்துகள் அதிகமாக இயக்கப்பட்டு, நமக்குக் கிடைக்க வேண்டிய வருவாயை அவர்கள் எடுத்துச் செல்கின்றார்கள். ஆகவே, இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு, அரசியலுக்கு அப்பாற்பட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடலூரிலிருந்து பந்தலூருக்கு ஒரு பேருந்தும், பந்தலூரிலிருந்து கூடலூருக்கு ஒரு பேருந்தும் என இரண்டு நகரப் பேருந்துகளை இயக்குவதற்கு விதிகளின்படி ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அங்கே கிட்டத்தட்ட 68 சதவீதம் அளவுக்குத்தான் பயணிகளுடைய அடர்வு இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பக்கத்து மாநிலங்களிலுள்ள பேருந்துகள் அதிக அளவில் இயக்கப்படுவதால், தமிழகத்திற்கு வர வேண்டிய வருமானம் குறைந்து விட்டதென்று சொல்கிறார்கள். அது தவறான கருத்து. ஏனென்று சொன்னால், அங்கு 80 சதவீதத்திற்கு மேல் பயணிகளுடைய அடர்வு இருக்குமானால் அதிகப் பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும். அதுமட்டுமல்லாமல், இதுகாறும் 22 வழித்தடங்களில், 9 பேருந்துகள் தட நீட்டிப்பு செய்யப்பட்டு, இயக்கப்பட்டு வருகின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேருந்து நிலையமானது மூன்று மாநிலங்களின்*

2015 செப்டம்பர் 28]

மையப் பகுதியில் அமைந்திருக்கின்ற காரணத்தினால், இதனை விரிவாக்கம் செய்ய வேண்டுமென்று கடந்த 2011–2012 ஆம் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 50 இலட்சம் ரூபாயும், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து 23 இலட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, விரிவாக்கப் பணி தொடங்கப்பட்டது. அந்தப் பணிகளை இன்றுவரை ஏனோ சரிவர செய்யாமல் இருக்கிறார்கள். மேலும், அந்த விரிவாக்கப் பணிகளுக்கு அதிகமான நிதி தேவைப்படுவதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நிதியை ஒதுக்கீடு செய்து, அந்த விரிவாக்கப் பணிகளை முடித்துத் தருவார்களா என்று தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே கேள்வியையும் கேட்டுவிட்டு, அவரே அதற்கான பதிலையும் சொல்லியிருக்கிறார். போதிய நிதி இல்லாத காரணத்தினால்தான், அந்தப் பேருந்து பணிமனையும், பேருந்து நிலையமும் விரிவாக்கம் செய்யமுடியாமல் இருக்கின்றன. போதிய நிதியை ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. நிதியைப் பெற்ற பின்னர், உடனடியாக நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை வட்டத்திலிருந்து புதியதாக காளையார்கோவில் வட்டம் பிரிக்கப்பட்டதற்குப் பின்னர், காளையார்கோவிலிலிருந்து ஏற்கெனவே சிவகங்கை பகுதிக்குச் சென்றுவந்த மக்கள், இப்போது காளையார்கோவில் வட்டத்திற்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அந்த*

அடிப்படையில், காளையார்கோவிலை மையமாக வைத்து, காளையார்கோவில் முதல் நாட்டரசன்கோட்டை, அதேபோல, காளையார்கோவிலிலிருந்து சேத்தூர், காளையார்கோவிலிலிருந்து பாகனேரி என்று காளையார்கோவிலை மையமாக வைத்து, கூடுதலாக நகரப் பேருந்துகளை இயக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே, அப்படி பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய வட்டம் ஏற்படுத்திய காரணத்தினால், புதிய நகரப் பேருந்துகள் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் அந்தப் பேருந்து வழித்தடங்களில் பயணிகளின் அடர்விற்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 363, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

363—

சமுதாயக் கூடம்

***41310—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, டி. கல்லுப்பட்டி ஒன்றியம், செங்குளம் கிராமத்தில் ஆதி திராவிட மக்களுக்கு தாட்கோமூலம் சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?